**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13 ஆம் நாள் திங்கள்கிழமை**

**I.A. 1/2025 in O.S. No.107/2021**

1. முத்துராஜா
2. முத்தையா
3. பத்மாவதி

..... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/ எதிர்/

நாகராஜன் ..... எதிர்மனுதாரர் /வாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 26.09.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.வாசுதேவன் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

அசல்வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டி சிபிசி ஆர்டர் 8 ரூல் 9 மற்றும் பிரிவு 151 ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுவுரை சுருக்கம்</u>**

மனுதாரர் இந்த வழக்கில் 1ம்மனுதாரர்/1ம்பிரதிவாதி, 2ம்மனுதாரர் 1ம்மனுதாரரின் சகோதரர், 3ம்மனுதாரர் 1ம்மனுதாரரின் தாயார் ஆவார். இந்த மனுதாரர் வழக்கில் கண்ட சொத்தினைப் பொறுத்து இன்ஜங்கஷன் உத்தரவு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் தக்க எதிர் உரை தாக்கல் செய்துள்ளார்கள். ரிட்டன் ஸ்டேட்மெண்ட்டில் கிராம நத்தமாக வகைப்படுத்தப்பட்ட நிலம் ஊராட்சிக்கோ அரசுக்கோ எவ்வித பாத்தியமும் உரிமையும் இல்லை என்ற உயர்நீதிமன்ற உத்தரவுகள் தொடர்பாகவும், வாதியின் மாமியார் பாப்பாத்தி அம்மாள் ஒப்படைப்பு நிபந்தனையையும் மீறி கிரைய ஆவணம் வாதியின் பெயரில் ஏற்படுத்தியதை ஆட்சேபணை செய்து வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்து மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள விபரம் கூறாமல் விடுபட்டுப்போய்விட்டது. மேற்படி விபரம் தொடர்பாக இத்துடன் கூடுதல் ரிட்டன் ஸ்டேட்மெண்டை மனுதாரர்கள் தாக்கல் செய்கிறார்கள். கூடுதல் ரிட்டன் ஸ்டேட்மெண்ட்டை ஏற்றுக்கொண்டு உத்தரவாகி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3). இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5). **<u>தீர்வு</u>**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், மேற்படி ரிட்டன் ஸ்டேட்மெண்டில் கிராம நத்தமாக வகைப்படுத்தப்பட்ட நிலம் ஊராட்சிக்கோ அரசுக்கோ எவ்வித பாத்தியமும் இல்லை என்ற உயர்நீதிமன்ற உத்தரவுகள் தொடர்பாகவும், வாதியின் மாமியார் ஒப்படைப்பு நிபந்தனையையும் மீறி கிரைய ஆவணம் வாதியின் பெயரில்

ஏற்படுத்தியதை ஆட்சேபணை செய்து வருவாய் கோட்டாட்சியரிடம் மேல்முறையீடு செய்து வழக்கு நிலுவையில் உள்ள விபரம் கூறாமல் விடுபட்டுப்போய்விட்டதாகவும், மேற்படி விபரம் தொடர்பாக இம்மனுவுடன் கூடுதல் ரிட்டன் ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில், வழக்கு விசாரணையிலும் தொடங்கப்படவில்லை என்பதாலும், தரப்பினர்களின் வாதுரைகளை முழுமையாக கேட்கபட வேண்டும் என்பதாலும், இவ்வழக்கோடு தொடர்புடைய சாட்சிய விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பாக கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு விட்டதால் எதிர்மனுதாரர்/ வாதிக்கு எவ்வித வாதமும் ஏற்படாது என தீர்மானித்து கூடுதல் எதிர் வழக்குரையை ஏற்றுக்கொள்வதற்காக மனுதாரர்/ பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவை அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

**முடிவாக**, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2025.11.07 16:41:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.